## மாற்றுத் திறனாளிகள், தமிழறிஞர்களுக்கு

# கட்டணமில்லா பயண அட்டைகள் வழங்க கால நீட்டிப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, ஜீன் 27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில், மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப்போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வாயிலாக பெற்றிடும் வகையில், 07.09.2023 முதல் முதற் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், செயல்படுத்தப்பட்டது,

மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகள் அனைவரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வழியாக பெறுகின்ற வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப் படுத்த புதிய வசதிகளுடன் கூடிய மென் பொருள் தயாரிப்பு பணிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனை செயல்படுத்த, போதிய கால அவகாசம் தேவைப்படுகின்ற நிலையில், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/03/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பயண அட்டைகளை, 30/09/2025 வரை மேலும் நீட்டித்து பயணிகள் சிரமமின்றி பயணம் செய்யலாம் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சட்டமன்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, பயனாளிகள் பெற்றிட வழிவகை செய்யப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப்போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்டவர்களுக்கு இணையதளம் வாயிலாக கட்டணமில்லா பயணஅட்டைகளை பெறும்வசதி, முதற் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்தி இலவச பயண அட்டைகளை புதியதாக பெறவும், ஏற்கனவே உள்ள பயண அட்டைகளை புதுப்பிக்கவும் ஏதுவாக புதிய வசதிகளுடன் கூடிய மென் பொருள் தயாரிப்பு பணிகள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழியாக (TNEGA) தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனை செயல்படுத்த போதிய கால அவகாசம் தேவைப்படுகின்ற நிலையில், பயனாளிகள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையிடம் ஏற்கனவே பயன்படுத்தி வரும் பயண அட்டைகளை மேலும் மூன்று மாத காலம் நீட்டித்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டு, 31/03/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பயண அட்டைகளை, 30/09/2025 வரை நீட்டித்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் அனைத்து பயனாளிகளும் எவ்வித சிரமமின்றி பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமாரபாளையம் ஜெ.கே.கே.சுந்தரம்

### ஜூன் 27 (2005)



சிறு வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இலங்கையில் வசித்தபோது கொழும்புவில் கிளைக் கழகச் செயலாளராகவும், தாயகம் திரும்பிய பின் 1970ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் 2004ல் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.

"நான் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும், தன் காரிலேதான் நான் பயணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அலமேலு அப்பாதுரை

### ஜூன் 27 (2001)



தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## எளிமை ஆளுமைத் திட்டத்தின் கீழ் - எளிமைப்படுத்தி வழங்குதல்!

சென்னை, ஜூன் 27-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை - சுகாதார சான்றிதழ் வழங்கும் நடைமுறையினை எளிமை ஆளுமை (Simple Gov) திட்டத்தின் கீழ் எளிமைப்படுத்தி வழங்குதல் குறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

எளிமை ஆளுமை (SimpleGov) திட்டத்தின் கீழ் சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate) பெறுவதற்கான நடைமுறை தற்போது எளிமைபடுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் சுகாதார சான்றிதழ் வழங்கும் தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு, சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசாணை (நிலை) எண்: 276 நாள் 23.09.2024-ல் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி இ-சேவை இணையதளம் (https://www.tnesevai.tn.gov.in/) வாயிலாக சுய சான்றளிப்பின் அடிப்படையில் சுகாதார சான்றினை பெறலாம்.

மேற்காணும் சான்றில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் உண்மைத்தன்மையினை ஆய்வு செய்ய பொது சுகாதார துறை அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (25.06.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஈச்சம்பட்டியில் சிறப்பு கால்நடை மருத்துவம் மற்றும் விழிப்புணர்வு முகாமினை தொடங்கி வைத்து அங்கு கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் பேரூராட்சிகளின் இயக்குநர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ந.தியாகராஜன், செ.ஸ்டாலின்குமார், சீ.கதிரவன், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---






## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 28.06.2025 | மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில், மன்னம்பந்தல். | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன் மா.க.சூர்யா |
| 2 | 29.06.2025 | மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | பெட்ரோல் பங்கு அருகில், சோழம்பேட்டை. | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன் நாகை பா.அருண்குமார் |
| 3 | 30.06.2025 | மணல்மேடு பேரூர் | பேரூராட்சி அலுவலகம் அருகில், மணல்மேடு. | மயிலாடுதுறை சின்னமாரியப்பன் அ.தீன்ஷா நூஃப் |
| 4 | 01.07.2025 | செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் | கடைவீதி, இலுப்பூர். | ஆடுதுறை மு.உத்திராபதி சொ.தமிழினியன் |
| 5 | 03.07.2025 | செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், கீழையூர். | ஆரூர்.மணிவண்ணன் சொ.தமிழினியன் |
| 6 | 04.07.2025 | செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் | கடைவீதி, திருக்கடையூர். | மருதூர் பி.எஸ்.அகிலன் த.குமரவேல் |
| 7 | 05.07.2025 | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, நச்சினார்குடி. | பசும்பொன் ரவி த.குமரவேல் |
| 8 | 06.07.2025 | மயிலாடுதுறை நகரம் | விஜயா திரையரங்கம் அருகில், மயிலாடுதுறை. | பசும்பொன் ரவி ஜோ.வியானி விஸ்வா |
| 9 | 07.07.2025 | குத்தாலம் வடக்கு ஒன்றியம் | பழைய கூடலூர் | தூத்துக்குடி சரத்பாலா ஜோ.வியானி விஸ்வா |
| 10 | 08.07.2025 | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, குத்தாலம். | தூத்துக்குடி சரத்பாலா இரா.செ.கபில்சாய் |
| 11 | 09.07.2025 | சீர்காழி கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, மங்கை மடம். | சைதை.சாதிக் சொ.தமிழினியன் |
| 12 | 10.07.2025 | சீர்காழி மேற்கு ஒன்றியம் | விளந்திடசமுத்திரம், சீர்காழி. | சைதை.சாதிக் சொ.தமிழினியன் |
| 13 | 11.07.2025 | சீர்காழி நகரம் | பழைய பேருந்து நிலையம் அருகில், சீர்காழி. | பசும்பொன் ரவி கோ.ரகுநாத் |
| 14 | 12.07.2025 | குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, பெரம்பூர் | பசும்பொன் ரவி இர.மதுமிதா |
| 15 | 13.07.2025 | கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, கடவாசல் | ஆடுதுறை மு.உத்திராபதி இரா.செ.கபில்சாய் |
| 16 | 14.07.2025 | கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | அகரவட்டாரம் பிரதான சாலை | சேலம் சுஜாதா ரா.கருணா |
| 17 | 15.07.2025 | தரங்கை பேரூர் | புதிய பேருந்து நிலையம், பொறையார். | சேலம் சுஜாதா மா.க.சூர்யா |
| 18 | 16.07.2025 | வைத்தீஸ்வரன்கோவில் பேரூர் | மேலவீதி, வைத்தீஸ்வரன்கோவில். | கோமல் விஜயஅறிவழகன் மா.க.சூர்யா |
| 19 | 17.07.2025 | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | கடைவீதி, நீடூர் | சூர்யாகிருஷ்ணமூர்த்தி இர.மதுமிதா |

மயிலாடுதுறை
நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023

